**R5318** **THE RACE-COURSE OF THE AGE - IT'S "CLOUD OF WITNESSES"**

# யுகத்தின் ஓட்டப்பந்தய சாலை – அதன் "மேகம் போன்ற சாட்சிகள்"

"ஆகையால்,மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்."–எபிரேயர் 12:1

இந்த வசனத்தின் ஆரம்ப வார்த்தைகள், பரிசுத்த பவுல் முந்தய அதிகாரத்தில் சொன்னவைகளுக்கு நமது மனதை பின்னோக்கி நடத்துகிறது. கடந்த கால இந்த விசுவாச குணசாலிகள் நிறைவேற்றின மாபெரும் காரியங்களை கவனிக்கும் போது, அவர்கள் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள்; அவர்கள் தங்களையும் தங்களது பூமிக்குரிய உரிமைகளையும், சலுகைகளையும் வெறுக்க விருப்பங்கொண்டார்கள். இப்படியாக திரளான சாட்சிகள், தியாகிகள், நம்மை சுற்றியிருக்க, அவர்களது உதாரணங்களின் உத்வேகம், நமது ஓட்டத்தில் மாபெரும் விசுவாசத்திற்கு நம்மை தூண்ட வேண்டும்.

அப்போஸ்தலர் பழங்கால பாத்திரர்களை, "மேகம் போன்ற சாட்சிகள்" என்று கூறுகிறார். அவர் சாட்சிகள் என்ற வார்த்தையை, தற்காலத்தில் பயன்படுத்துகிறது போல பார்வையாளர்கள் என்ற பொருளில் பயன்படுத்தவில்லை. ஆரம்பத்தில் சாட்சிகள் என்பது சத்தியத்தின் சாட்சிகள், தியாகிகள் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஆகையால் இந்த வசனம் பொருள் படுத்துகிறதாவது: சத்தியத்துக்கு சாட்சியாக வாழ்ந்தவர்கள், தியாகிகள், தங்கள் சொந்த சலுகைகள் மற்றும் வாழ்க்கையிலிருந்தே துண்டிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் உங்களை சூழ்ந்திருக்கிறதை நீங்கள் பார்க்கும் போது, அது உங்களில் பலமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த பழங்கால பாத்திரர்கள் அவர்களது வாழ்க்கையின் சாதனைகள் மூலம் நம்மை கீழே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பழங்கால பாத்திரர்கள் இறந்து போயிருந்தாலும் அப்போஸ்தலருடைய உருவக பேச்சிலிருந்து நீக்கப்பட வேண்டியதில்லை. இப்படியாக அறிக்கை பொதுவாக நம் அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு சமயத்தில் நெப்போலியன் தனது படையை நோக்கி கூறியதாவது: "எனது மனிதர்கள் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன் உன்னை பின்னோக்கி பார்க்கிறார்கள்." சரியாக சொல்லுவோமானால், நூற்றாண்டுகள் பின்னோக்கி பார்க்க முடியாது. ஒரு வார்த்தைக்கு அப்படி சொல்லலாம். ஏனெனில் கடந்த காலத்தில் நடந்த காரியங்களை முப்பது நூற்றாண்டுகள் மற்றும் இன்னும் அதிகமாக கவனித்து புரிந்து கொள்ளலாம்.

நம்மை சுற்றியிருக்கிற இந்த "மேகம் போன்ற சாட்சிகளை" நமக்கு ஞாபகப்படுத்த அப்போஸ்தலர் விரும்புகிறார். ஆகையால் நாம் இந்த ஓட்டத்தை உண்மையாக ஓட வேண்டும். இந்த மேன்மையான குணசாலிகள், நாம் பெறப்போகிற பரிசை பெற முடியாவிட்டாலும், அவர்களுக்கென்று ஒரு பரிசு இருக்கிறது. அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த இலக்கை அடைய அவர்கள் எப்படி உண்மையுடன் சகித்து சாதித்தார்கள் என்பதை நாம் நினைவுகூர்ந்து, நமக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள கனம், மகிமை மற்றும் சாகாமை என்கிற இலக்கை அடைய எவ்வளவு ஜாக்கிரதையாக ஓட வேண்டும்!

இந்த "மேகம் போன்ற சாட்சிகள்" நம்மை தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. பழங்கால பாத்திரர்களின் அனுபவங்களே நமது அனுபவங்களாக இருக்கின்றன. நமது பிரயாணத்தின் ஒவ்வொரு படியிலும் அவர்களது ஓட்டத்தைப் பற்றி கூர்ந்த சிந்தனையில் நாம் உற்சாகத்தையும் பலத்தையும் காண்கிறோம். அப்போஸ்தலர் நமது தலைப்பு வசனத்தின் சித்திரத்தை நமக்கு கொடுப்பதில், நாம் ஒரு ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை கவனிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தற்கால வாழ்க்கையின் காரியங்களை நாம் ஒரு ஓட்டப்பந்தய சாலையிலிருந்து நோக்க வேண்டும்.

பரிசுத்த பவுல் அவரது காலத்தில் மிகவும் பிரபலமாயிருந்த கிரேக்க விளையாட்டுகளை விசேஷமாக ஓட்டப்பந்தயத்தை தனது மனதில் வைத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் கனம், மகிமை மற்றும் சாகாமை என்ற ஓட்டப்பந்தயத்தில் இருப்பவர்களுக்கு அவரது ஆலோசனை அவரது மனதின் சித்திரத்தை அடிப்படையாக் கொண்டிருக்கிறது. அந்த ஓட்டப்பந்தயத்தில் இருப்பவர்கள் அத்தியாவசியமாக தேவையற்றவைகளை நீக்குவது போல, கிறிஸ்தவர்கள் அவர்களது ஓட்டத்திற்கு தடையாயிருப்பவைகளையும் சுமைகளையும் ஒதுக்கி வைத்து, அவர்களுக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும்.

### எதெல்லாம் சுமையாக இருக்கிறது?

ஒதுக்கி வைக்க வேண்டிய சுமைகள் பல்வேறு மனிதர்களுக்கு வேறுபடுகிறது. ஒருவர் பட்டங்களையும், கனத்தையும் சுதந்தரித்திருக்கலாம். பரிசுத்த பவுல் இவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு ரோம பிரஜையாக இருந்தார். இது அவரது காலத்தில் மிகவும் கனத்துக்குரியதாக இருந்தது. அவர் கிறிஸ்தவ ஓட்டப்பந்தயத்தில் நுழையும் போது இந்த தனியுரிமையை ஒதுக்க வேண்டியிருந்தது. எனினும் சத்தியத்தினிமித்தம் தன்னை ரோம பிரஜை என்று தேவைப்படும் போது சொல்லிக்கொண்டது அவருக்கு அனுகூலமாக இருந்தது. எனினும் அவர் இரட்டை வேஷம் போடவில்லை. எனினும் உலக அங்கீகாரத்திற்காகவோ மற்றும் தனக்கு அனுகூலமாகவோ அவர் பயன்படுத்தவில்லை. மற்ற சமயத்தில் கர்த்தரின்

ஜனங்களிடத்தில் ஐக்கியத்திற்காக பயன்படுத்தவில்லை. ஒரே காரியத்தை மட்டுமே செய்தார். அது குறித்து அவர் கூறுகிறதாவது: ''சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்.'' (பிலிப்பியர் 3:13,14)

இன்னொரு சுமை செல்வம். இதன் மூலம் அவர் அதிக செல்வம் உடையவராய் ஒரு பெரிய வீட்டை பெற்றிருந்து, அநேக வேலைக்காரர்களை கொண்டிருந்து அவரது வகுப்பினரைப் போன்று வாழக்கூடிய எண்ணம் ஓட்டப்பந்தயத்தில் தடையாக இருக்கும். எனினும் அவர் கர்த்தருடைய பிள்ளைகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இன்னொரு சுமை சில வகையிலான திறமையாகும். இன்னொரு சுமை மனிதர்களின் அங்கீகார அன்பு முதலானவை.

கனம், நித்திய மகிமைக்கான பந்தயத்தில் ஜெயங்கொள்ள விரும்புகிற அவர் அந்த எல்லா சுமைகளையும் அவர் அங்கீகரித்த மற்றவைகளையும் ஒதுக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால் அவர் ஊனமுற்றவராக இருந்து நல்லபடியாக ஓடமாட்டார். சிலர் முற்றும் ஜெயங்கொண்டவர்களாயிருந்து பரிசை பெறுவார்கள். மற்றவர்கள், ஊனமுற்றவர்களாயி -ருப்பதினால் இரட்சிக்கப்பட்டு, தாழ்ந்த நிலைமையே பெறுவார்கள்.

இந்த பூமிக்குரிய கடமைகளாகிய இலட்சியம், கனங்கள் முதலானவைகளை அவர் எப்படி மதித்தார் என்று பரிசுத்த பவுல் நமக்கு சொல்லுகிறார். அவர் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் பரிசுடன் இவைகளை அவர் நிறுத்தும் ஒப்பிட்டும் பார்த்தார். இந்த பூமிக்குரிய லாபமாயிருந்தவைகளை நஷ்டமும் குப்பையுமாக தீர்மானித்தார். ஆகையால் அவைகள் அனைத்தையும் தூக்கி எறிந்தார்.

பூமிக்குரியவைகளை பிடித்துக் கொண்டிருப்பவர்களைக் குறித்து கர்த்தர் அறிவிப்பதாவது: ''ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது?'' இந்த செல்வம் வெறும் தங்கத்தை மட்டும் குறிக்காதபடி கனம், அந்தஸ்து, வல்லமை, ஜனங்களின் ஆதரவு முதலானவைகளை குறிக்கும். இவைகளெல்லாம் பரிசுக்காக அழைக்கப்பட்டிருக்கிற பந்தயத்திற்கு ஒரு தடையாக இருக்கும் என்பதை நிரூபிக்கிறது.

கடந்தகால விசுவாச சாட்சிகளை பின்னோக்கி பார்க்கும் போது, அவர்கள் மிகவும் குறைவான சுமைகளையே தங்களோடு எடுத்துச் சென்றார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் தங்கள் சுமைகளை தூக்கி எறிந்துவிட்டு, தங்களுக்கு இருக்கிற பாதையில் பொறுமையோடே ஓடினார்கள்.

எனினும், எல்லா சுமைகளும், தடைகளும் தூக்கி எறிய வேண்டியவைகளல்ல. தன் மனைவி மற்றும் குழந்தைகளுடன் ஓட்டப்பந்தயத்தில் நுழைகிறவன் அவர்களை ஒதுக்க வேண்டியதில்லை. அவனது ஒவ்வொரு தோளிலும் ஒரு குழந்தை இருக்குமானால், அவர்களுடனே அவன் ஓட வேண்டும். ஆனால் பிரம்மச்சாரியாக இருக்கிறவன் ஓட்டப்பந்தயத்தில் ஓட விரும்பினால், ஒவ்வொரு தோளிலும் எத்தனை குழந்தைகளை சுமக்க வேண்டும் என்பதையும் அல்லது மனைவியையும் தோள்களில் சுமக்க வேண்டுமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். சிலருக்கு மனைவியுடன் இருப்பது தடையாக இருக்கும். ஆனால் சிலருக்கு மனைவியில்லாமல் தடையாக இருக்கும். ஆகையால் எது சிறந்தது என்பதை ஒவ்வொருவரும் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் பிரமாணம் எதையும் வைக்க விரும்பவில்லை.

## பரம்பரை பலவீனங்களும் சுற்றி நெருங்கியிருக்கிற பாவங்களும்

நமது தலைப்பு வசனத்தின் பிற்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சுற்றி நெருங்கியிருக்கிற பாவங்களைப் பற்றி பார்ப்போம். இன்னொரு மொழி பெயர்ப்பில் சுற்றி கட்டிருக்கிற பாவம் என்றும், அதாவது நம்மை நெருங்கி சுற்றியிருக்கிற பாவம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சில பாவங்கள் தளர்வாக பறக்கிற உடையைப் போலவும் மற்றவைகள் நம்மை நெருங்கி சுற்றிக் கொண்டிருக்கிறவைகளைப் போலவும் இருக்கின்றன. இந்த தடைகளுடன் ஓடுபவர், அவ்வப்போது ஓட்டத்திலிருந்து விலகி நேரத்தை இழக்க வேண்டியிருக்கும்.

நாம் எந்த விதத்திலும் பாவத்தை தவிர்க்க வேண்டும். பாவம் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. நம்மை நெருங்கி சுற்றிக்கொண்டிருக்கிற பாவத்தை முற்றிலும் விலக்க முடியவில்லை என்றால், அது நம்முடைய ஓட்டத்தை தடை செய்யாத அளவுக்கு அதை நாம் விலக்க வேண்டும். இந்த பாவம் பரம்பரை பலவீனத்தினால் உண்டாயிருந்தால், ஒருவரின் இயற்கையான சுபாவமாக இருந்தால், என்ன செய்வது? பிறகு அவர் நடக்காமல். உட்காராமல், வெற்றிக்கொள்ள முழு சத்தியையும் பயன்படுத்தி, ஒவ்வொரு தசையையும் பயன்படுத்தி ஓட்டப்பந்தயத்தில் ஓட வேண்டும். இதைத்தான் நமது வசனத்தில் அப்போஸ்தலர் நமக்கு முன் வைக்கிறார்.

கர்த்தர் வேதாகமத்தில் இந்த காரியத்தை நமக்கு முன் தெளிவாக வைத்திருக்கிறார். ஓட்டப்பந்தயம் கற்பனையானதல்ல, உண்மையான ஒன்று. இந்த பந்தயத்தை கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் நிச்சயமாக சில நிபந்தனைகளை வைத்திருக்கிறார். அவரது உதவியும் பந்தய முடிவில் பரிசும் எதிர்பார்க்கப்பட வேண்டும். வேத வாக்கியங்களில்

கொடுக்கப்பட்டுள்ள விளக்கமான தகவல்களுக்கும், சகல உதவிகள் மற்றும் ஊக்களுக்கும் மற்றும் நம்மை சுற்றியிருக்கிற இந்த மாபெரும் சாட்சிகளின் மேகங்களுக்கும் நாம் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். மேலும் கர்த்தரின் கிருபையினால், நாம் பொறுமையோடு ஓடுவோம்; ஏனெனில், பரிசுத்த ஆவியின் இந்த கிருபை இல்லாமல், வழியில் ஒருவன் விழுந்து விடுவான், எல்லாவற்றையும் சீக்கிரத்தில் இழந்து விடுவான்.

## இடையறாத எச்சரிக்கை அவசியம்

ஒருவர் ஒரு சில அடிகள் ஓடலாம். ஆனால் இவர்களில் சிலர் மானிட வாழ்க்கையின் காரியங்கள் அவர்களை தடை செய்வதை கண்டு, தேவையற்ற சகல சுமைகளையும் விட்டு விட வேண்டும் என்று உணர்ந்து, முயற்சிப்பதில் பிரயோஜனம் இல்லை, தியாகம் அதிகம் என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் அப்போஸ்தலர் பொறுமையோடு இருக்கும்படி ஊக்குவிக்கிறார். ஏனெனில் இந்த சகல சோதனைகள், கஷ்டங்கள் முதலானவைகள், சரியாக ஏற்பட்டு குணலட்சணத்தை அபிவிருத்தி செய்கிறது. உண்மையான, விசுவாசமுள்ள குணசாலிகள் நீதியில் உருவாக்கப்பட வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிற இப்படிப்பட்ட நீதியான அனுபவங்களினால் தவிர, இவர்கள் அபிவிருத்தி பண்ணப்பட்டு, விளக்கப்பட முடியாது.

அப்போஸ்தலர் ஈடுபட்டிருந்த பந்தயத்திற்கான நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் நன்கு அறிந்திருந்தார். இந்த விதிமுறைகளின்படி வாழவில்லையென்றால் அவர் ஜெயங்கொள்ள முடியாது என்பதை அறிவார். மிகவும் நெருக்கமான கவனமும் தளராத எச்சரிக்கையும், குறித்த காலத்தில் குறிக்கோளை அடைய தேவை என்பதை அவர் அறிந்தார். ஓட்டப்பந்தய காலத்தில் யார் ஜெயங்கொள்ளுவார்கள், ஜீவ கிரீடத்தை பெறுவார்கள் என்பது நிச்சயமில்லாதிருக்கும். ஒலிம்பிக் மற்றும் கிரேக்க விளையாட்டுகளில் மிகவும் விரும்பத்தக்க வெற்றி கிரீடத்தை யார் பெறுவார்கள் என்பது எப்பொழுதும் நிச்சயமில்லாதிருந்தது.

பூமியில் நடக்கும் எந்த பந்தயத்தைக் காட்டிலும் கிறிஸ்தவர்களின் ஓட்டம் மிகவும் சிறப்பானது. நாம் ஓடுகிற இலக்கையும் நமக்கு பாதுகாப்பு இருக்கிறது என்பதையும் அறிந்து நாம் உண்மையுடன் ஓடினால் பரம அழைப்பின் பரிசை அடைவோம் என்பதையும் நாம் அறிவோம். வெறும் பலத்திற்காக ஒரு பந்தயமல்ல நம்முடையது; வேதாகமத்திற்காக ஒரு வெற்றி, இந்த பந்தயத்தில் அவனது முயற்சியின் ஆர்வத்திற்கு தக்கதாக ஒவ்வொருவரும் பரிசை பெறுவார்கள். ஒருவன் தன் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் ஓடினால் அவன் நிச்சயமாக பரிசை பெறுவான். இதற்கு முன் இப்படிப்பட்ட பந்தயம் இருந்ததில்லை! இந்த பந்தயத்தில் வைக்கப்பட்டிருக்கிற இப்படிப்பட்ட மகிமை இதற்கு முன் நமக்கு முன் வைக்கப்படவில்லை!